C.O.S.No.2/2023 தேதி – 14.08.2025

வா.சா.3. – வெள்ளைப்பாண்டியன்

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை –

நான் டி.வி.எல்.எஸ். நிறுவனத்தில் பணிபுரிவதற்கு எந்த ஆதாரமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் மேற்படி நிறுவனத்தில் பணிபுரியவில்லை என்றாலும், வாதி கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஜெய்தீப் ஏஜென்சிஸ் நிறுவனத்தின் மூலம் வாதி அறிவுரையின்படி பிரதிவாதி நிறுவனத்திற்கு சரக்குகளை இறக்கி விடுவோம் என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 உண்மை நிலையை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 ல் குறிப்பிட்டுள்ள வரவு செலவுகள் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.20 ல் கூறப்பட்டுள்ள தொகைகளை எங்களுக்கு கிடைத்த வகைக்கு ஆதாரமாக வங்கி கணக்குகளில் சமர்பிக்கவில்லை என்றால் சரியல்ல. வங்கி கணக்கு ஸ்டேட்மெண்ட் கொடுக்கவில்லை. எங்கள் நிறுவனத்தால் பராமரிக்கப்படும் வாதி நிறுவனத்தின் வரவு செலவு கணக்குகளை வா.சா.ஆ.20 ஆக தாக்கல் செய்துள்ளோம். வா.சா.ஆ.21 ஆனது மொத்த புத்தகத்தில் அடங்கிய ஒரு தனித்தாள் என்றால் சரிதான். ஆனால் மொத்த புத்தகத்தை நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21 ல் பிரதிவாதி நிறுவனத்தை சேர்ந்தவர்கள் கையொப்பம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. கையொப்பம் செய்துள்ளார்கள். இந்த வழக்கில் கூறப்பட்டுள்ள விசயங்களுக்கும், வா.சா.ஆ.21 ற்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. நான் வாதி நிறுவனத்திற்கு மிகவும் நெருங்கியவர் என்பவதால் வா.சா.ஆ.21 வழக்கிற்காக உருவாக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை.